# ஐரோப்பாவில் எழில் பூக்கள் கவிதை நூல் அறிமுக விழா

தமிழர்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் போற்றி வந்த தமிழ் மரபுக் கவிதை என்னும் அற்புதமான கலை மெல்ல மறைந்து வருகின்றது.

இலக்கணத்தின் வழி நின்று கவிதைகள் படைப்பவர்கள் அருகி விட்டார்கள். பல்வேறு கவிதைகளின் அமைப்பையும் சந்தங்களையும் கூடத் தமிழர்கள் மறந்து விட்டார்கள்.

மரபுக் கவிதைகளைத் தற்காலச் சந்ததியினருக்கு நினைவூட்டி அடுத்த தலைமுறைக்குத் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் அவுஸ்திரேலியக் கவிஞர் தம்பிப்பிள்ளை நந்திவர்மன் எழில் பூக்கள் என்ற தலைப்பிலே ஒரு கவிதை நூலை வெளியிட்டிருந்தார்.

சில கவிதைகளைத் தமிழக இசையமைப்பாளர் உதயனின் இசையமைப்பில் பாடல்களாக்கி ஒரு இறுவெட்டையும் அவர் வெளியிட்டிருந்தார். இந்த இறுவெட்டில் வாணி ஜெயராம், எஸ். பி. சைலஜா, நித்யஸ்ரீ மகாதேவன், மதுபாலகிருஷ்ணன் போன்ற பாடகர்கள் பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

கவிஞர் நந்திவர்மன் இந்த நூலை டொரொண்டொ, வான்கூவர் உட்பட இதுவரை 8 உலக நகரங்களில் அறிமுகஞ் செய்து வைத்திருக்கின்றார். இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் மேடையிலே தமிழ் கவிதைகளைச் சந்தத்தோடு படித்துப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

இந்த வரிசையில் எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலண்டனிலும் அதன் பின்னர் மார்ச் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை சுவிஸ். சூரிச்சிலும் எழில் பூக்கள் கவிதை நூல் அறிமுக விழாக்கள் நடைபெறுகின்றன. இது பற்றிய விபரங்களை விழா அறிவித்தலில் நீங்கள் காணலாம்.

தமிழன்பர்கள் சுற்றஞ் சூழ வந்து இந்த விழாவையுந் தமிழையும் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றார் கவிஞர் நந்திவர்மன்.